மதிய உணவுத் திட்டம்

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியில் தொடக்கப்பள்ளிகளில், படிக்கும் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதை எண்ணிக்கையில் அதிகரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(இ) ஆமெனில், எப்போது செய்யவுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இப் பொருள் சென்னை மாநகராட்சியினரால் பரிசீலிக்கப்பட வேண்டியது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*277 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of food poisoning cases that came to the knowledge of the Government in connection with the Midday Meals Scheme during the last five years; and

(b) (1) the names of the institutions involved in such cases; and (2) the number of students affected?

Midday Meals Scheme

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்தாண்டுகளில் நண்பகல் உணவு தொடர்பாக அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட உணவில் நச்சுப் பொருள் கலந்த நேர்வுகள் எத்தனை?

(இ) அத்தகைய நேர்வுகளில் தொடர்புடைய (1) கல்வி நிலையங்களின் பெயர்கள், (2) பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் யாவை?

1973 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 3.

(இ) (1) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வடபாதி மங்கலம், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கொடமுருட்டி (விழுப்புரம் கல்வி மாவட்டம்), அரசினர் நடுநிலைப் பள்ளி, திண்டுக்கல்.

(2) 122.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அண்மையிலே ஹோசூர் மாவட்டத்திலேகூட ஓர் இடத்திலே உணவிலே இது போல நச்சுப் பொருள் கலந்திருந்ததனாலே மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அது போல தொடர்புடைய நிகழ்ச்சி இதிலே இல்லை. அதைப் பார்க்கின்றபோது, ஒரு வேளை இது குறைவாக இருக்குமோ என்று நினைக்கின்றேன். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உணவில் நச்சுப் பொருள்கள் கலந்த வகையில் அந்த மூன்று பள்ளிகளிலும் இந்த நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் அந்த மூன்று பள்ளிகளிலும் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு மருத்துவம் செய்த பிறகு அதிலே யாரும் இறந்து போகவில்லை. அதுதவிர வேறு 5 இடங்களிலே நச்சுப் பொருள்களாலும் காலரா போன்ற வேறு பல காரணங்களினாலும் இந்த நிலைமை ஏற்பட்டது. அந்த வகையிலேதான் தஞ்சை மாவட்டத்திலே அம்மாப்பேட்டை சாகம், அம்மாப்பேட்டை ஆர்.சி. துவக்கப்பள்ளியில் 180 பேர்கள் மதிய உணவால் பாதிக்கப்பட்டு, அதிலே 17 பேர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள். அதிலே 9 வயது, 5 வயது சிறுமியர்கள் 2 பேர்கள் இறந்தார்கள். அதற்குப் பிறகு அதைப் பரிசோதனைக்கு அனுப்பிய வகையில் அதிலே இரண்டு வகைகள் இருந்தன. ஒன்று காலரா உகாவா என்கின்ற தன்மையில் இருக்கின்றது. மற்றொன்று நெகடிவ் என்று ஆராயப்பட்டு வந்திருக்கின்றது. அது நச்சுப் பொருள்கள் கலந்ததன் காரணமாக அல்ல. தஞ்சை மாவட்டம் சீர்காழி மணிக்கிராமத்தில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி வந்து 9 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். அதிலே 2 பேர்கள் இறந்து

விட்டார்கள். இதிலும் இரண்டில் ஒன்று காலரா உகாவா என்றும் மற்றொன்று காலரா நெகடிவ் என்றும் புலன் ஆயிற்று. பிறகு கழுகு மலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் 130 பிள்ளைகளில் மதிய உணவு உண்டதால் 57 பேர்கள் பாதிக்கப்பட்டனர். சிகிச்சைக்குப் பிறகு அனைவரும் உடல் நலமுற்றார்கள். தர்மபுரி மாவட்டம் சூளகிரி சரகத்தில் உள்ள வத்தலபள்ளியில் 50 பிள்ளைகள் 31-7-72ல் மதிய உணவு உண்டதால் 12 பிள்ளைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மதிய உணவில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள், பாத்திரங்கள் முதலியவை ரசாயன ஆய்வுக்கு சோதனைக்கு அனுப்பப்பட்டதில் விஷம் கலந்துவிட்டதற்கு அறிகுறி ஒன்றும் தென்படவில்லை என்று அறிக்கை வந்திருக்கின்றது. இந்த 5 பள்ளிகளிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மதிய உணவு மையங்களுக்காக அமெரிக்காவிலிருந்து வழங்கப்படும் கேர் நிறுவனம் சார்பாக வரக்கூடிய உணவுப்பொருள்கள் செல்லரித்தும் பூச்சிகள் உள்ளதாகவும் சில நிறுவனங்களில் வழங்கப்படக்கூடிய சூழ்நிலையிருக்கின்றது. அந்தப் பொருள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அம்மாதிரிப் பொருள்கள் வழங்கப்படாமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் கொடுக்கின்ற உணவில் கிட்டத்தட்ட ரூ. 6 கோடி விலை மதிப்புள்ள பொருள்களை 16 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர் மாணவியர்களுக்கு நாம் அளிக்கின்றோம். அதிலே கோளாறு ஏற்படுவதில்லை. நமது உணவகத்திலேயிருந்து வருவதிலே கோளாறு இல்லை என்று சொல்வதற்கில்லை. இங்கே கொண்டு வந்து வைக்கும்போது, சரியாக பாதுகாப்பாக வைக்கமுடியாத இடங்களிலே வைத்திருந்ததனால், கோளாறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆகவேதான் அதைத் தவிர்ப்பதற்கு பல அறிவுரைகள், குறிப்பாணைகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆய்வு அலுவலர்கள் அவ்வப்போது கவனமாக மதிய உணவு மையங்களைப் பார்வையிட வேண்டுமென்றும் பணிக்கப்பட்டிருக்கின்றார்கள். பல இடங்களில் இப்படி எதிர்பாராத நிலைமைகள் ஏற்பட்டதனால், பாத்திரங்கள் போன்றவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

1973 மார்ச் 27]

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, குழந்தைகளுக்கு இலவச உணவு அளிப்பதில் ‘நச்சு கலந்துவிட்டது, நச்சு கலந்து விட்டது’ நச்சுப் பொருள்களை, விஷப்பொருள்களை அதிலே கலக்கின்றார்கள் என்ற தோரணையில் உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறுகின்றார்கள். அந்த நச்சுப்பொருள்கள் அகற்றப்பட வேண்டியவைகள்தான். ஆகவே நச்சுப்பொருள்கள் இல்லாமல் குழந்தைகளுக்கு அளிப்பதற்காக, மதிய உணவை குழந்தைகளுக்கு அளிப்பதற்கு முன்னால் அதை ஆசிரியர்கள் ஒருவர் இருவர் சாப்பிட்டுப்பார்த்து ‘டெஸ்ட்’ செய்து, அதற்குப் பிறகு குழந்தைகளுக்கு அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதனால் ஏற்படுகின்ற குறைபாடுகள் அல்ல. நூறு பேர், இருநூறு பேர் உணவு உண்ணும்பொழுது 10, 15, 20 பேர்கள்தான் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. மிகவும் பாதிக்கப்படுபவர்கள் ஒருவர் இருவர்தான். ஆகவே அந்த முறையில் எல்லோருமே சாப்பிடுகின்ற சூழ்நிலை ஏற்படாது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: திரு. சி. வி. ராஜகோபாலுக்கு ஆசிரியர்கள் மேலே கோபம். என் கூடப் படித்துக் கொண்டு வந்தவர்கள். தேர்ட் பாரத்திலேயே ‘பெயில்’ ஆகிவிட்டார்கள். அதனாலே அவருக்கு ரொம்பக் கோபம்.

திரு. செ. முத்துசாமி: அந்தக் காலத்தில் அரசர்களுக்கு உண்டு காட்டிகள் என்று உண்டு காட்டுவதற்காக ஒருவர் இருந்ததாகச் சொல்வார்கள். இப்போது உண்டு காட்டிகளாகப் பணிக்க வேண்டுமென்று உறுப்பினர் கருதுகிறாரா?

திரு. சி. வி. ராஜகோபால்: குழந்தைகள் அனுபவிக்கின்ற அந்தக் கஷ்டத்தை ஆசிரியர்களும் அனுபவிக்கட்டும்.

Government Polytechnic Teachers Association

*278 *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government Polytechnic Teachers Association has demanded greater promotional avenues for teachers in October 1972; and